**செய்தி வெளியீடு எண்:496** **நாள்: 29.07.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (29.7.2017) திருவண்ணாமலையில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

நேர்மையின் சின்னம்! நீதியின் செங்கோல்! அன்பின் களஞ்சியம்! கொடுத்துச் சிவந்த கரம், கலியுகக் கர்ணன், பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனி, புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இம்மகத்தான விழாவிற்கு
சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர்
டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!
தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **தனபால்** அவர்களே!
முன்னிலை வகிக்கின்ற இந்த மண்ணின் மைந்தர்
திரு. **சேவூர் இராமச்சந்திரன்** அவர்களே!
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
திரு. **திண்டுக்கல் சீனிவாசன்** அவர்களே!
திரு. **செங்கோட்டையன்** அவர்களே!
திரு. **செல்லூர் ராஜு** அவர்களே!
திரு. **தங்கமணி** அவர்களே!
திரு. **வேலுமணி** அவர்களே!
திரு. **ஜெயக்குமார்** அவர்களே!
திரு. **சி.வி. சண்முகம்** அவர்களே!
திரு. **கே.பி.அன்பழகன்** அவர்களே!
டாக்டர் **வி.சரோஜா** அவர்களே!
திரு. **எம்.சி.சம்பத்** அவர்களே!
திரு. **கே.சி.கருப்பணன்** அவர்களே!
திரு. **ஆர்.காமராஜ்** அவர்களே!
திரு. **ஓ.எஸ். மணியன்** அவர்களே!
திரு. **உடுமலை கே.ராதாகிருஷ்ணன்** அவர்களே!
டாக்டர் **சி.விஜயபாஸ்கர்** அவர்களே!
திரு. **இரா.துரைக்கண்ணு** அவர்களே!
திரு. **கடம்பூர் ராஜு** அவர்களே!
திரு. **ஆர்.பி.உதயகுமார்** அவர்களே!
திரு. **வெல்லமண்டி என்.நடராஜன்** அவர்களே!
திரு. **கே.சி.வீரமணி** அவர்களே!

திரு. **கே.டி.ராஜேந்திர பாலாஜி** அவர்களே!
திரு. **பா.பெஞ்சமின்** அவர்களே!
டாக்டர் **நிலோபர் கபில்** அவர்களே!
திரு. **எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்களே!
திரு. **எம்.மணிகண்டன்** அவர்களே!
திருமதி. **வி.எம்.ராஜலட்சுமி** அவர்களே!
திரு. **ஜி.பாஸ்கரன்** அவர்களே!
திரு. **எஸ்.வளர்மதி** அவர்களே!
திரு. **பி. பாலகிருஷ்ணா ரெட்டி** அவர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர்
திரு. **பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!
அரசு தலைமைக் கொறடா
திரு. **இராஜேந்திரன்** அவர்களே!
தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி
திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே!
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி
**பா.வளர்மதி** அவர்களே!
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய
தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசு செயலாளர் திரு. வெங்கடேசன்
அவர்களே!
நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **பிரசாந்த் வடநேரே** அவர்களே!
மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களே!
மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே!

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தலைவர்
திருமதி. **அமுதா அருணாச்சலம்** அவர்களே!
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் நாடாளுமன்ற மற்றும்
சட்டமன்ற உறுப்பினர்களே,

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகத் தொண்டர்களே!
கூட்டுறவுத்துறை நிர்வாகிகளே,
முன்னாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளே,
அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,
வணக்கத்திற்குரிய பெரியோர்களே,

இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
தாய்மார்களே, நலத்திட்டப் பயனாளிகளே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவுக்கு விவசாயம், அமைதிக்கு ஆன்மீகம்,மகிழ்ச்சிக்கு சுற்றுலா, இவை மூன்றும் ஒரு மனிதனை ஆரோக்கியமாக வாழச் செய்யும்.

இந்த மூன்றும்
ஒரே மாவட்டத்தில் அமைந்திருக்கிறது
என்றால்
அது திருவண்ணாமலை மாவட்டம்தான்.

எனவே தான் ஆரோக்கியத்திற்காகவும், மகிழ்ச்சிக்காகவும், மன அமைதிக்காகவும்,
உலகத்தின் பல பகுதிகளில் இருந்தும்
புண்ணிய பூமி திருவண்ணாமலைக்கு
மக்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள்.

திருவண்ணாமலையில் அமைந்துள்ள
அருணாசலேஸ்வரர் ஆலயம்,
உலக மக்களை தன்வசம் இழுக்கும்
காந்த சக்தி கொண்டதாக திகழ்கின்றது.

திருவாரூரில் பிறக்க முக்தி!
காஞ்சியில் வசிக்க முக்தி!
காசியில் இறக்க முக்தி! என்பார்கள்...
ஆனால்
**திருவண்ணாமலையை நினைத்தாலே**
**முக்தி கிடைக்கும்.**

இந்தியாவின் புகழ்பெற்ற பஞ்சபூத ஸ்தலங்களில்
அக்னி ஸ்தலமாக திருவண்ணாமலை விளங்குகிறது.

ஞானிகள் மற்றும் சித்தர்களின்
ஆன்மாக்கள் உலவும் நகரமாக திருவண்ணாமலை விளங்குகிறது.

பகவான் ரமணரும், சேஷாத்திரி சுவாமிகளும்
பக்தியால் உறைந்த இடம்
இந்த திருவண்ணாமலை.

18 சித்தர்களில் ஒருவரான இடைக்காட்டுச்சித்தர் வாழ்ந்து இறையருள் பெற்றதும் இந்த திருவண்ணாமலைதான்.

மாணிக்கவாசகர் சுவாமிகள்,
திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர்

போன்ற பெருமக்களால்
பாடல் பெற்ற ஸ்தலம், இந்த திருவண்ணாமலை.
இந்த மண்ணில்தான் திருப்புகழ் பாடிய
அருணகிரிநாதர் அவதரித்தார்.

அதனால்தான் உலகம் முழுவதிலும் இருந்து
இலட்சோப இலட்சம் பக்தர்கள்
கிரிவலம் என்ற பெயரில்
இந்த புனித பூமியில் கால்பதிக்க
வந்த வண்ணம் இருக்கிறார்கள்.

இத்தகைய சிறப்பு மிக்க திருவண்ணாமலையில்
ஏழைகளுக்கெல்லாம் இறைவனாகத் தெரியும்
மக்கள் தலைவர், பொன்மனச் செம்மல்,
புரட்சித்தலைவர் அவர்களின்
நூற்றாண்டு விழாவை
சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டிருப்பது
நமக்கெல்லாம் மகிழ்ச்சியை அளிக்கிறது.
மறைந்தும் மறையா வரம் பெற்ற
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின்
வரலாற்று சாதனைகளை,
அவர் நடந்து வந்த பாதைகளை

அவர் வாழ்க்கையில் கடைபிடித்த
ஒழுக்கத்தை, பண்பாட்டை,
உழைப்பால் உயர்ந்த வரலாற்றை
இந்த தலைமுறை இளைஞர்களும்,
குழந்தைகளும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக,

தமிழ்நாடு அரசு
எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை
30.6.2017–ல் மதுரையில் தொடங்கி
இவ்வாண்டு டிசம்பரில் சென்னையில்
நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளது.

அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பணியாளர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகள், மாண்புமிகு அம்மாவின் விசுவாசிகள், பொதுமக்கள், அனைவரின் ஒத்துழைப்புடன் மதுரையிலும், திருப்பூரிலும் நூற்றாண்டுவிழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

கார்த்திகை தீபத்தின்போது
பக்தர்களால் சூழப்பட்டிருக்கும் திருவண்ணாமலை,

இப்போது காண்போரை வியக்க வைக்கும் வண்ணம் இன்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

உடன்பிறப்புகளால் பெருங்கடலென சூழப்பட்டுள்ளது.

அதற்காக, இம்மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் இராமச்சந்திரன் அவர்களுக்கும், அவர்களோடு உறுதுணையாக இருந்து உழைத்த மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் கழக விசுவாசிகள் என்று அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

“மக்களுக்காக திட்டங்கள்,
திட்டங்களுக்காக மக்கள் அல்ல’’
என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறுவார்கள்.

இந்த பொன்மொழி, மாண்புமிகு அம்மாவின்
இதயத்தில் தோன்றுவதற்கு,
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அவர்களின்
திட்டங்களும் தான் காரணம் என்பதை இங்கே கூற விரும்புகிறேன்.

மக்களுக்காக எப்படி திட்டம் போட வேண்டும் என்று புரட்சித்தலைவர் அவர்கள் “கன்னித்தாய்” என்ற படத்தில் வரும் பாடலின் மூலம் வெளிப்படுத்தினார்கள்.

**‘‘தவி தவிக்கிற**
**ஏழைக்காகத் திட்டம் போடணும் – பொருளை சரிசமமா பங்கு வைக்க சட்டம் போடணும்**
**குவியக் குவிய விளைவதெல்லாம் கூறுபோடணும்–ஏழை**
**குடிசைக்குள்ளே தேனும் பாலும் ஆறா ஓடணும்.’’**

திட்டங்கள் என்றால்
அது ஏழைகள் வாழ்க்கையை
மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான்
புரட்சித்தலைவரின் நோக்கம்.

புரட்சித்தலைவர் முதல்வராக இருந்தபோது மின்சார விளக்கு இல்லாத
வீடுகளே இருக்கக் கூடாது என்று
‘‘குடிசைக்கு ஒரு மின்விளக்கு’’ திட்டத்தின்கீழ்
இலவச மின்சாரம் வழங்கினார்.

அந்தத் திட்டத்திற்குப் பிறகுதான்
அதுவரை இருண்டுகிடந்த பல குடிசைப்பகுதிகள்
முதன்முதலாக வெளிச்சத்தைப் பார்த்தன.

ஏழைகளின் வாழ்க்கைக்கும்

வெளிச்சம் கிடைத்தது.
ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி கிட்டியது.

ஏழைகளின் முகங்களிலும் வெளிச்சம் தெரிந்தது.
புரட்சித் தலைவரை ஏழை மக்கள் தங்கள்
இதயங்களில் குலவிளக்காக வைத்து போற்றினார்கள்.
புரட்சித்தலைவர் அவர்களின் திட்டங்களிலேயே
உலகப் பிரசித்தி பெற்ற திட்டம்
முதலமைச்சரின் சத்துணவுத் திட்டமாகும்.
தனது சிறுவயதில் ஒருவேளை பசிக்கு
உணவில்லாமல் இருந்ததைப்போல
வேறு எந்த குழந்தையும்
பசியால் வாடக்கூடாது என்று 1982ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் அவர்கள்
இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

இன்று இலட்சக்கணக்கான குழந்தைகள்
ஒருசேர சத்தான மதிய உணவு சாப்பிட

வழி வகை ஏற்பட்டது.
புரட்சித்தலைவர் அவர்கள் காலத்தில்
கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டது.
புரட்சித்தலைவர் அவர்கள்
ஆட்சிக்கு வந்த மறு வருடத்தில்
11 வருடங்களாக இருந்த இடைநிலைக்கல்வியை 10 வருடங்களாக மாற்றியமைத்தார்.
பட்டப்படிப்புக்கு முன்னதாக கல்லூரியில் படிக்கும்
பி.யு.சி. ரத்து செய்யப்பட்டது.

அதற்குப் பதிலாக
2 ஆண்டுகள் படிக்கும் +2 எனப்படும் மேல்நிலைக்கல்வி பள்ளிகளில் அறிமுகம் செய்யப்பட்டது.

அப்போது மற்ற மாநிலங்களில் +2 வகுப்புகளை
கல்லூரிகளில் நடத்தினார்கள்.
தமிழகத்தில் மட்டுமே பள்ளிகளில்
+2 வகுப்புகள் நடந்தன.

இதனால் தமிழகத்திற்கு மிகப்பெரிய பலன் கிடைத்தது. மாநிலம் முழுவதும் பரவியிருந்த பள்ளிகளில் +2 வகுப்புகள் நடைபெற்றது.

இத்திட்டத்தின்மூலம் கிராமப்பகுதிகளிலும்
அதிகமான குழந்தைகள் கல்வி கற்க முடிந்தது.

புரட்சித்தலைவர் அவர்கள் பள்ளிக்கல்வித் துறையில்தான் இப்படி ஒரு புரட்சியைக்
கொண்டு வந்தார் என்றால்,

உயர்கல்வித் துறையிலும் அதிரடியான பல
புரட்சிகளைக் கொண்டு வந்தார்.

நூறு ஆண்டுகளில் தமிழகத்தில்
4 பல்கலைக்கழகங்கள் மட்டுமே நிறுவப்பெற்றன.
ஆனால் தமிழ்நாடு முதல்வராக
நமது புரட்சித் தலைவர்
பதவியேற்ற 11 ஆண்டுகளில்
7 புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன.

பாரதியார், பாரதிதாசன், காமராஜர், அண்ணா பல்கலைக் கழகங்கள்,

அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், தஞ்சை தமிழ் பல்கலைக் கழகம், ஈ.வெ.ரா. மணியம்மை பெண்கள் பல்கலைக்கழகம் ஆகியவை புரட்சித்தலைவர் அவர்களால் நிறுவப்பெற்றவையாகும்.

தமிழ்நாட்டின் வாழ்வாதாரம்
விவசாயத்தை நம்பி இருப்பதால்..
புரட்சித்தலைவர் அவர்கள்
விவசாயிகளின் நலனில்
அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள்.

அதனால்தான்..

**“கடவுள் என்னும் முதலாளி**
**கண்டெடுத்த தொழிலாளி—விவசாயி ”** என்று

தனது “விவசாயி” படத்தில் பாடி நடித்திருப்பார்.
அவருடைய நடிப்பிற்கும் வாழ்க்கைக்கும்
இடைவெளியே இருக்காது.

விவசாயிகளை கடவுளின் குழந்தையாகவே
நினைத்தவர் புரட்சித்தலைவர் அவர்கள்.
அவர் எண்ணத்தில் உள்ளதுதான்
கதையாகவும், வசனமாகவும், நடிப்பாகவும் வரும்
என்பது எல்லோருக்கும் தெரியும்.
தனது எண்ணங்களில் உதித்த
பொதுமைக் கருத்துக்கள்,
குழந்தைகளுக்குரிய அறிவுரைகள், உழைப்பாளியின் வாழ்வில் உள்ள கஷ்டங்கள், பொது நீதி, பெண்மைக்கு மரியாதை,
அரசியலில் நேர்மை என்று

அனைத்து விதமான அறிவுரைகளையும்
தனது திரைப்படப் பாடல்களின் வழியாக சாதாரண எளிய மக்களுக்கு சென்று சேர்த்தார்.
தான் அறிவுறுத்தியவாரே வாழ்ந்தும் காட்டினார்.
விவசாயிகள் புரட்சித்தலைவரை
எந்த அளவுக்கு போற்றினார்கள் என்பதற்கு
ஒரு சம்பவத்தை இங்கே நினைவுபடுத்துகிறேன்.

எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சி தொடங்கி
தேர்தல் பிரச்சாரத்தில் மும்முரமாக
ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தை இங்கே நினைவுகூற விரும்புகிறேன்.

மதுராந்தகத்தில் தேர்தல் பிரச்சாரத்தை
முடித்துக் கொண்டு திரும்பும்போது,
ஊரின் எல்லையில் வயல்வேலைக்கு
சென்று கொண்டிருந்த விவசாயிகள்
புரட்சித்தலைவரை பார்த்துவிட்டார்கள்.

புரட்சித் தலைவரின் காரை மறித்து,
‘‘மூன்று ஆண்டுகளாக சரியான விளைச்சல் இல்லாமல் நாங்கள் கடனில் தத்தளிக்கிறோம்.
எங்கள் நெல் விளையும் பூமியில்
உங்கள் பொன்னான கால் பட்டால்
அதில் பொன் விளையும்.

எனவே, உங்கள் பாதம் எங்கள் நிலத்தில் ஒரு முறையேனும் பட வேண்டும்’’, என்று  அன்போடு வலியுறுத்தினார்கள்.

அதற்குள் கையில் மண் சட்டியுடன் ஒருவர் வந்தார்.  அவ்வளவு தூரம் நடந்துவந்து நீங்கள் சிரமப்பட வேண்டாம்.

இந்த மண்சட்டியில் உள்ள மண்ணை மிதித்துக் கொடுத்தால்,  அந்த மண்ணைக் கொண்டுபோய்
எங்கள் வயலில் தூவுகிறோம் என்றார்கள்.
அந்த விவசாயிகளின் அன்பைக் கண்டு
வியந்து போன மக்கள் திலகம்,
விவசாயிகளின் விருப்பப்படியே
மண்சட்டியில் காலை வைத்து மிதித்துக் கொடுத்தார்.

அந்த விவசாயிகளின் அன்பிற்கு கைமாறாகத்தான்
புரட்சித்தலைவர் ஆட்சிக்கு வந்தபிறகு
விவசாயிகளுக்காக பல திட்டங்களை
கொண்டுவந்து அவர்களின் வாழ்வில் விளக்கேற்றினார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

16.1.2010 அன்று  கழக உடன்பிறப்புகளுக்கு எழுதிய மடல் ஒன்றில்,

புரட்சித்தலைவர் அவர்கள்
காவிரி நீர் பிரச்சனையை எப்படி கையாண்டார்
என்பதை மிக அழகாக கோடிட்டுக்
காட்டியிருந்தார் என்பதை உங்களோடு
நான் பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

ஆட்சிக் கட்டிலில் அமருவதற்கு முன்பே
தமிழ்நாட்டின் தண்ணீர் பிரச்சனையை
தீர்த்து வைத்தவர் புரட்சித்தலைவர் அவர்கள்.

1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்பு
தமிழகம் முழுவதும் புரட்சித்தலைவர் அவர்கள் சூறாவளி சுற்றுப்பயணம் செய்தார்கள்.
அப்போது வற்றிய ஏரி, குளங்களையும்,
வாடிய பயிர்களையும் பார்வையிட்டார்கள்.

இதற்குக் காரணம், கர்நாடகம் காவிரியில் தண்ணீர் திறந்துவிடாததுதான் என்பதையும்
கேட்டுத் தெரிந்து கொண்டார்.
உடனடியாக கர்நாடக பொதுப்பணித் துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு,
அவருடைய வீட்டிற்கு
விருந்து சாப்பிட வருவதாக தெரிவிக்கிறார் புரட்சித் தலைவர்.

பலமுறை விருந்துக்கு அழைத்த போது எல்லாம் வராத புரட்சித்தலைவர்,
தானாகவே வலிய வந்து
விருந்துக்கு வருகிறேன் என்று சொன்னதும்,
கர்நாடக பொதுப்பணித் துறை அமைச்சர் ஆனந்தமடைகிறார்.

மறுநாள் விருந்தில் பங்கேற்கிறார் புரட்சித்தலைவர்.

விருந்துக்கு வந்த புரட்சித் தலைவரை கர்நாடக
பொதுப்பணித் துறை அமைச்சரும்,
அவருடைய தாயாரும் அன்புடன் உபசரித்தனர்.
விருந்து ஆரம்பித்த உடனேயே புரட்சித்தலைவருக்கு விக்கல் வருகிறது.

புரட்சித்தலைவருக்கு விக்கல் வருவதைப் பார்த்த அமைச்சரின் தாயார்,
தன் மகனிடம்
"அவருக்கு விக்கல் வருகிறது;
தண்ணீர் தரக்கூடாதா? என்று கேட்கிறார்.
உடனே புரட்சித்தலைவர் அவர்கள்

“உங்கள் மகன் எங்கே தண்ணீர் தருகிறார்?”
என்று தமிழகத்திற்கு கர்நாடகா
தண்ணீர் திறந்துவிடாததையும்,
தமிழ்நாட்டில் பயிர்கள் வாடுவதையும்
சூசகமாக தெரிவிக்கிறார்.

புரட்சித்தலைவரின் வருகைக்கான
காரணத்தை புரிந்து கொண்ட கர்நாடக
பொதுப்பணித் துறை அமைச்சர்,
கர்நாடக முதலமைச்சரிடம்
இந்தத் தகவலை தெரிவித்தார்.

கர்நாடக முதலமைச்சரும்,
“எம்.ஜி.ஆர். கேட்கும் உதவியை உடனடியாகச் செய்யுங்கள்” என்று
உத்தரவிடுகிறார்.

புரட்சித்தலைவர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு
வந்து சேர்வதற்கு முன்பாகவே
காவேரித் தண்ணீர் இங்கு வந்து சேர்ந்தது.

அதனால்தான் புரட்சித்தலைவர் ஆட்சிக்கு வந்து
மூன்று முறை முதல்வராக, 11 ஆண்டுகாலம்
ஆட்சி செலுத்தி, மக்களின் இதயம் நிறைந்த
முதல்வராக சாதனை புரிந்தார்.
புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே
மக்களிடையே புரட்சித்தலைவர் அவர்களுக்கு எத்தனை
செல்வாக்கு இருந்தது என்பதை ஒரு சம்பவத்தின்மூலம் இங்கே கூற
கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரையில் 1976ம் ஆண்டு நடந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில்
அன்னை இந்திராவும் புரட்சித்தலைவரும்
கலந்து கொண்டனர்.

பல்வேறு கட்சித் தலைவர்கள் பேசினார்கள்.
கடைசியாக புரட்சித்தலைவரும், பிரதமரும்
பேச வேண்டும். மக்கள் செல்வாக்கு மிக்க புரட்சித்தலைவரை முதலில்
பேச வைப்பதா?
பாரதப் பிரதமர் இந்திரா அம்மையாரை
பேச வைப்பதா?

கூட்டத்தை நடத்தியவர்களுக்கு
ஒரு நெருக்கடி ஏற்பட்டது.

இதை நொடிப் பொழுதில் புரிந்து கொண்ட
புரட்சித்தலைவர் அவர்கள் மைக்கை நோக்கி நடந்தார்.
அந்த சமயம் யாரும் எதிர்பாராத வகையில் அன்னை இந்திராகாந்தி
அம்மையார், எழுந்து சென்று புரட்சித்தலைவரின்
கையைப் பிடித்து நிறுத்தி,

''முதலில் நான் பேசி விடுகிறேன்.
அதன்பின்பு நீங்கள் பேசுங்கள்.
ஏனென்றால் நீங்கள் முதலில் பேசிவிட்டால்
கூட்டத்துக்கு வந்த மக்கள் கலைந்து
சென்று விடுவார்கள்''. என்று கூறி முதலில்
அன்னை இந்திரா அம்மையார் பேசினார்.

பிறகுதான் புரட்சித்தலைவர் பேசினார்.
புரட்சித்தலைவருக்கு கிடைத்த இந்தப் பெருமை
இந்தியாவில் உள்ள வேறு எந்த
முதல்வருக்கோ, மாநிலத் தலைவருக்கோ கிடைத்ததில்லை என்பதை
பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும்
அந்தத் திட்டத்தின் பலன் முழுமையாக
பயனாளிகளுக்குச் சேர்கிறதா என்றும்,
திட்டத்தில் குறிப்பிட்டதைப் போல இம்மியளவும்
குறையாத தரத்துடன் திட்டப் பொருள்கள்
வழங்கப்படுகிறதா? என்பதை புரட்சித்தலைவர்
அவர்கள் தாயுள்ளத்தோடு கண்காணித்தார்கள்.
புரட்சித்தலைவர் தமிழக முதல்வராக
இருந்த போது, இலவச காலணி திட்டத்தை
அமல்படுத்த முடிவெடுத்தார்.

அப்போது தமிழ்நாடு தோல்பொருள் வாரியத்தைச் சார்ந்தவர்கள் இலவச காலணியின் ஒரு ஜோடி மாதிரி காலணியை கொண்டுவந்து காட்டினார்கள்.

புரட்சித்தலைவர் அந்தக் காலணிகளை வாங்கி
தண்ணீர் தொட்டியில் போட்டு ஊறவைத்தார்.
சிறிது நேரம் கழித்து அதை மடக்கி பரிசோதித்த போது காலணி பிய்ந்து
போய் கையோடு வந்து விட்டது.

கடுங்கோபம் கொண்ட புரட்சித்தலைவர்
காலணியை கொண்டு வந்தவர்களிடம்

"கிராமத்திலிருந்து நகரத்திற்கு வேகாத
வெயிலில் கால் வலிக்க நடந்து படிக்க வரும்
ஏழைப் பிள்ளைகளுக்கு இது போன்ற

தரமற்ற காலணியையா வழங்குவது?
ஒரு மழைக்குக்கூட இது தாங்காதே.

மழை, வெயில் இரண்டுக்கும் தாக்குப் பிடிக்கிற அளவுக்கு தரமான காலணியாக தயாரித்து கொண்டு வாருங்கள்'', என்று கண்டிப்பான குரலில் உத்தரவிட்டார்.

அதன் பின்னர் வழங்கப்பட்ட
இலவசக் காலணிகள் மிகத் தரமானவையாக இருந்தன என்பது நாடறிந்த உண்மை.

அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், ஏழை எளிய மக்களுக்கு அளித்த விலையில்லா திட்டப் பொருட்கள் ஆகட்டும்,

பள்ளிக் குழந்தைகளுக்கு அளித்த
விலையில்லா பொருட்கள் ஆகட்டும்,

அவற்றின் தரத்தினை தானே சோதித்துதான்
அப்பொருட்களை ஏழை மக்களுக்கும், பள்ளிக் குழந்தைகளுக்கும்
விநியோகிக்க
உத்தரவிடுவார்கள்.

தமிழ்நாட்டு மக்களின்மேல் இவ்விரு
தலைவர்களுக்கும் இருந்த அக்கறையை
இது காட்டுகிறது.
அதனால்தான் மக்களும் இத்தலைவர்களை தங்கள் குடும்பத்தில்
ஒருவராக பாவித்தனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
தொலைநோக்கு பார்வையுடன்
திருவண்ணாமலையை உலக ஆன்மீக மையமாக
உருவாக்கினார்கள்.

உலகின் பல பகுதிகளிலிருந்தும் வருகை தரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய அத்தனை வசதிகளையும் செய்து தரும்படியான திட்டங்களை வழங்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
ஆணையிட்டபடி கடந்த 6.2.2017 அன்று
ஒரு கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில்
அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு
நடைபெற்றது.

கிரிவலப் பாதையில் சாதுக்கள் தங்குவதற்கு சாமியார் மடம், பக்தர்கள் தினசரி உணவருந்தும்
அன்னதானக் கூடம், ஓதுவார் பயிற்சிப் பள்ளி,
ஆதரவற்ற சிறுவர்களுக்கு உணவு,
கல்வியுடன் கூடிய கருணை இல்லம்,
கோசாலை ஆகியன பல கோடி ரூபாய்
மதிப்பீட்டில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

பக்தர்கள் தங்குவதற்கு 28 கோடி ரூபாய் செலவில் யாத்ரீநிவாஸ் கட்டும்பணி விரைந்து
நடைபெற்று வருகிறது.

இதைத் தவிர திருவண்ணாமலை மாவட்டத்தில்
மட்டும் 2011–லிருந்து 2017 வரை
449 திருக்கோயில்களில் 37 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள்
மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

திருக்கோயில் பணிகளைத் தவிர
சமூக நலப்பணிகள் பலவற்றையும்
மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்த
பல்வேறு திட்டங்களை அம்மா அவர்களின்
வழியில் வந்த இந்த அரசு தொடர்ந்து
நிறைவு செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.
பல துறைகளின் சார்பாக நிறைவேற்றப்பட்ட
அனைத்துத் திட்டங்களையும்
இங்கே குறிப்பிட முடியாவிட்டாலும்
ஒரு சில திட்டங்களை மட்டும்
இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில்
45 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில்
துணை மின்நிலையங்கள் மற்றும்
இதர கட்டடங்கள் **என மொத்தம்**
**192 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்**
**3112 பணிகள் 4.3.2017 அன்று**
**தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.**

8.5.2017 அன்று நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாரில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கோட்ட அலுவலகக் கட்டடங்கள்
திறந்து வைக்கப்பட்டன.

மேலும் சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை சார்பில்
திருவண்ணாமலை மாவட்டத்தில்
85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
கட்டப்படவுள்ள இசைப் பள்ளிக் கட்டடத்திற்கு
அடிக்கல் நாட்டப்பட்டது.
திருவண்ணாமலை மாவட்டத்தின்
பல்வேறு இடங்களில் அமைந்துள்ள
15 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டத்தின் கீழ் **25 கோடியே 12 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய்**
**மதிப்பீட்டில்** பள்ளிக் கட்டடங்கள்
மற்றும்

திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள
3 அரசு மேல்நிலைப் பள்ளிகளில்
நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ்
**5 கோடியே 26 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்** வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவை 24.6.2017ல் திறந்து வைக்கப்பட்டன.

ஆக மொத்தம் திருவண்ணாமலை
மாவட்டத்திற்கென
**289 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில்**
**3279 பணிகள் முடிக்கப்பட்டு**
**பொதுமக்களின் பயன்பாட்டுக்காக**
**திறந்து வைக்கப்பட்டும்,**
மேலும் 2 பணிகள் அடிக்கல் நாட்டப்பட்டு
பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

இன்று நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் 36.26 கோடி ரூபாய் செலவில் ஆரணி நகராட்சி கூட்டுக் குடிநீர் அபிவிருத்தி திட்டம் மற்றும் இதர கட்டிடங்கள் என மொத்தம் 67.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 134 பணிகள் தொடங்கி வைக்கப்படுகிறது.

புரட்சித்தலைவர் அவர்களுக்கும்,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் ஆன்மீக பூமியான
திருவண்ணாமலை மாவட்டத்தின் மீது பாசமும் அக்கறையும் உண்டு.

எனவே, அவர்கள் வழியில் வந்த இந்த அரசு

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு
இன்னும் பல திட்டங்களை வழங்கி
திருவண்ணாமலை மாவட்டத்தை
முன்மாதிரி மாவட்டமாக உருவாக்குவோம்
என உறுதி கூறுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள்
அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வை
ராணுவக் கட்டுப்பாட்டுடனும், குடும்ப
பாசத்துடனும் வளர்த்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுக்காக
தொண்டர்களும், தொண்டர்களுக்காக
மாண்புமிகு அம்மா அவர்களும்
தியாகங்கள் பல செய்து பாதுகாத்த கழகம் இது.

இந்நிலையில், தியாகங்கள் நிறைந்த ஒரு இயக்கம்
என்றால் அது அனைத்திந்திய அண்ணா தி.மு.க.தான்.

இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்காகவும் புரட்சித்தலைவி
அம்மா அவர்களும், கழகத் தொண்டர்களும் போட்டி போட்டுக் கொண்டு
தியாகங்கள் பல செய்திருக்கிறார்கள்.

அந்த தியாகங்களை நினைவு கூரும் போது
ஒரு கதையை இங்கே கூற விரும்புகிறேன்.

ஒரு காட்டுக்கு மேய்ச்சலுக்குச் சென்ற
பசுக்கூட்டம் மாலை வீடு திரும்பும்போது
உடல் சுகமில்லாமல் ஒரு பசு மட்டும் அந்தக் கூட்டத்திலிருந்து
பின்தங்கியது.
இதை உற்று நோக்கிக் கொண்டிருந்த ஒரு நரியும், அதன் குட்டியும்,
அந்தப் பசுவைத் தாக்கி
இரையாக்கிக் கொள்ள தீர்மானித்தன.

அந்த நரிகள் பசுவைத் தாக்க முற்படும்போது
பசு, அந்த நரிகளைப் பார்த்து, “நரிகளே!”
நீங்கள் என்னை இரையாக்கிக் கொள்ளுங்கள்.
ஆனால், கடைசியாக ஒரு விண்ணப்பத்தை
உங்களிடம் வைக்கிறேன்.

நான் மக்களால் புனிதமாக போற்றப்படுகிற பசு.
எங்களுக்கு உயர்ந்த குணாதிசயங்கள் உண்டு.
சொன்ன சொல்லை ஒரு நாளும் மீற மாட்டேன்.

என்னுடைய கன்று வீட்டில் இருக்கிறது.
நான் இங்கு உங்களுக்கு இரையாகிவிட்டால்,
நான் எங்கே சென்றேன் என்று என் கன்று

தவிக்க நேரிடும்.

எனவே, வீட்டிற்குச் சென்று என் கன்றிடம்
நடந்த விசயத்தைக் கூறி
நான் இல்லாமல் இந்த உலகத்தில் எப்படி
வாழ வேண்டும் என்று அறிவுரையும்
கூறிவிட்டு திரும்பவும் இங்கே வந்துவிடுகிறேன்.
இது சத்தியம்!
அதுவரை நீங்கள் பொறுத்திருக்க வேண்டும்'', என்றது.

நரிகள் சிரித்தபடியே, ''யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? நீ போனால் திரும்ப மாட்டாய்.
நீ திரும்புவதற்கு மற்ற பசுக்களும்
உன்னுடைய கன்றும் அனுமதிக்காது'',
என்றுகூறி மீண்டும் பசுவை கொல்ல நெருங்கின.

பசு மீண்டும், ''நான் ஒருபோதும் வாக்குறுதியை
மீற மாட்டேன். அப்படி மீறுவது என்பது
என் இனத்திற்கே இழுக்கைத் தேடித்தரும்.
என்னை நம்புங்கள்'', என்று கெஞ்சியது.

பசுவின் உருக்கமான பேச்சைக் கேட்டு
நரிகள் பசுவுக்கு அனுமதியளித்து
அனுப்பி வைத்தன.

பசு நேராக தன் வீட்டிற்கு வந்து கன்றை
கட்டித்தழுவி, காட்டில் நடந்த சம்பவத்தை கூறி,
''கன்றே! தாயில்லாமல் நீ இந்த உலகத்தில்
நல்ல பிள்ளையாக வாழ வேண்டும்.

நம் இனத்தைவிட்டுப் பிரியாமல் எப்போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்'', என்று
பல அறிவுரைகளைக் கூறி
காட்டுக்குத் திரும்ப முற்பட்ட போது,
கன்று, அதனை மறித்து,
''அம்மா! நானும் உன்னுடன் வருகிறேன்.
உன்னைப் பிரிந்து என்னால் வாழ முடியாது'',
என்று பிடிவாதம் பிடித்தது.

கன்றை சமாதானப்படுத்திவிட்டு,
நரிகள் இருக்கும் இடத்திற்கு பசு விரைந்தது.

பசு அங்கு சென்று சேர்வதற்குள்,
பசுவின் கன்று நரிகளோடு நின்று
பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்து
பசு அதிர்ச்சியுற்றது.

கன்று, நரிகளிடம், ‘‘நரியாரே!
என்னை முதலில் இரையாக்கிக் கொண்டு
பிறகு என் தாயாரை இரையாக்குங்கள்.

என் தாயைப் பிரிந்து என்னால் ஒரு காலமும்
வாழ முடியாது. எங்கள் இரண்டு பேரையுமே
நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்’’, என்று கெஞ்சியது.

இதைக் கேட்ட நரிக்குட்டி, நரியிடம்
‘‘அம்மா! தாய், பிள்ளை பாசம் என்ன என்பதை
நான் இப்போது புரிந்து கொண்டேன்.

பாவம், தியாக திருவுருவங்களாக இருக்கும்
பசுவையும் கன்றையும் நாம் இரையாக்கிக் கொள்ள வேண்டாம் என்றது.

நரிக்குட்டியின் ஆலோசனையைக் கேட்ட நரி,
பசுவையும் கன்றையும் வணங்கி
அந்த இடத்தைவிட்டு நகர்ந்தது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
நமக்காக தன் பொன் உடலை வருத்தி, உழைத்து தியாகம்
செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மாவிற்காக, அவருடைய குழந்தைகளாக இருந்து,
நாம் இந்தக் கழகத்திற்காக தியாகம் செய்து
கழகத்தின் மாண்பைக் காப்பாற்ற வேண்டும்
என்று உங்களையெல்லாம்
அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

- 65 கோடி ரூபாய் செலவில், பக்தர்களின் வசதிக்காக குடிநீர், கழிவறை, மின்விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கிரிவலப்பாதையை அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

- நீட் தேர்வு – இன்றைக்கு பல எதிர்க்கட்சித் தலைவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு நம்முடைய அம்மா அரசு மீது தேவையில்லாத கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு மாணவர்களின் நலனை கருத்திற்கொண்டு செயல்பட்டு வருகிறது. நான் ஒவ்வொரு முறை மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களை நேரில் சந்திக்கும் பொழுதும், தமிழக மாணவர்களுக்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கக் கோரி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். மேலும் நமது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர்,

சட்டத்துறை அமைச்சர் மற்றும் உள்துறை அமைச்சர் பெருமக்களை நேரில் சந்தித்து தொடர்ந்து நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்க வலியுறுத்தி வருகின்றனர் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே அம்மாவுடைய அரசு மாணவர்களின் நலன் காக்கும் அரசு.

விவசாயப் பெருமக்களுக்கு அவர்களுடைய நிலத்தை பண்படுத்த வேண்டுமென்பதற்காக, இயற்கை உரம் வண்டல் மண். அந்த வண்டல் மண் குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக கிடைக்க வேண்டுமென்பதற்காக 100 கோடி ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்து 1519 ஏரிகள் இதற்காக தேர்வு செய்யப்பட்டு அந்த ஏரிகளில் இருக்கின்ற வண்டல் மண்களை விவசாயிகள் பங்களிப்புடன் அரசும் சேர்ந்து விவசாயிகளுக்கு இலவசமாக வண்டல் மண்ணை அள்ளுவதற்கு அனுமதி அளித்து, அந்த விவசாயிகளும் அந்த வண்டல் மண்ணை அள்ளி, நிலங்களை பண்படுத்தி வருகின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். பல ஆண்டுகாலமாக விவசாயிகள், தங்களுடைய நிலங்களுக்கு இயற்கை உரம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்த இயற்கை உரம் வண்டல் மண். அப்படிப்பட்ட வண்டல்மண் தங்களது ஏரிப்பகுதியிலே இருக்கின்றது. அந்த ஏரிப்பகுதியிலே இருக்கின்ற வண்டல் மண்ணை, இலவசமாக எடுத்துக்கொள்வதற்கு அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு, விவசாயிகளின் பங்களிப்புடன் அதை இலவசமாக அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏரிகளில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளிக் கொள்ளலாம் என்று உத்தரவு வழங்கி, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் பெருமகிழ்ச்சியில் இருக்கின்றார்கள். அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளி தங்களுடைய நிலங்களுக்கு அதை எருவாகப் பயன்படுத்துகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். ஆகவே, இன்றைக்கு, அப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்பதற்காக 300 கோடி ரூபாயை நாங்கள் அளித்தோம். அதற்காக 2065 ஏரிகளை நாங்கள் தேர்வு செய்து, இந்தப் பணி விரைவாக துவங்கவிருக்கின்றது. இந்தப் பணி குடிமராமத்துப் பணி, விவசாயிகள் பங்களிப்போடு, அரசோடு சேர்ந்து நடக்கும் மிகப்பெரிய பணி. இதற்கு முன்பெல்லாம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபொழுது, டெண்டர் விட்டு இந்தப் பணியை துவங்கும் அரசு. இப்பொழுது அந்தந்த பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் பங்களிப்போடு அரசும் இணைந்து இந்த குடிமராமத்துத் திட்டத்தை நிறைவு செய்கின்றது. ஏனென்று சொன்னால் இந்தத் திட்டம் முழுமையாக விவசாயிகள் திட்டம். அந்தத் திட்டம் விவசாயிகளுக்கு முழுக்க, முழுக்க பயன்பட வேண்டுமென்பதற்காக அரசு, இந்த குடிமராமத்துத் திட்டத்தை விவசாயிகள் பங்களிப்போடு இன்றைக்கு நிறைவேற்றி வருகின்றது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் 13.3.2017 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், மணிமங்கலம் ஏரியிலே, நான் முதன்முதலாக, நேரடியாகச் சென்று அந்தக் குடிமராமத்துப் பணியை

துவக்கிவைத்தேன். அதுபோல, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அமைச்சர் அவர்கள், ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகளில் குடிமராமத்துப் பணிகளை துவக்கி வைத்தார்கள். அதற்குப் பிறகு அந்தப் பணி துவங்கி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு 55 நாள் கழித்து, இங்கிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் 7.5.2017 அன்று சைதாப்பேட்டை கோதண்டராமர் திருக்கோயில் குளத்தில் தூர்வாரினார். எல்லோரும் தூர்வாரினால் எங்கே தூர்வாருவார்கள் ? ஏரிகள், குளத்தில் தூர்வாருவார்கள். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் கோயில் குளத்தில் தூர்வாரினார். எண்ணிப்பாருங்கள். நாமெல்லாம், விவசாயப் பெருங்குடி மக்கள், மழை பெய்கின்ற காலங்களிலே, பெய்கின்ற மழை நீர் குளங்கள், ஏரிகளில் சேகரிக்க வேண்டும், கிணற்றிற்கு நிலத்தடி நீர் உயர வேண்டும், பாசனத்திற்குத் தேவையான நீர் கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையிலே குடிமராமத்துத் திட்டத்தை அறிவித்தோம். இந்தத் திட்டம் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று எண்ணி, இது, மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும், மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது. இது அரசுக்கு மிகப்பெரிய செல்வாக்கு மக்களிடத்திலே கிடைக்கின்றது என்று எண்ணி, இவர் கோயில் குளத்தில் சென்று தூர்வாருகின்றார். இந்த கோயில் குளம் பல ஆண்டுகளாக வறண்டு கிடந்தது. அப்பொழுதெல்லாம் இவருக்கு கண் தெரியவில்லை. நான் தூர்வாரியதையொட்டி, இந்த அரசுக்கு நல்ல பெயர் ஏதும் வந்துவிடுமேயென்று எண்ணி, இவர் கோயில் குளத்தில் தூர்வாரினார். சரி, தூர்வாருவதும் நல்லது தான். ஏனென்றால், கோயில் குளத்தில் தூர்வாருவதால் புண்ணியம் கிடைக்கும், யாரோ சொல்லியிருப்பார்கள் என்று எண்ணுகின்றேன். அதனால் தான், கோயில் குளத்தில் சென்று, புண்ணியம் தேடுவதற்காக அந்த பணியை செய்திருப்பார் என்று நான் கருதுகின்றேன். அதற்குப் பிறகு, இப்பொழுது என்னுடைய தொகுதிக்கு போய்விட்டார். தமிழகத்தில், பொதுப்பணித்துறை மற்றும் ஊராட்சி ஒன்றிய துறைக்கு உட்பட்ட ஏரி, குளங்கள் 40 ஆயிரத்திற்கு மேல் இருக்கின்றன. இத்தனை குளங்களிலும் ஒரே நேரத்தில் தூர்வாருவது என்பது இயலாத காரியம். படிப்படியாக திட்டமிட்டு அரசு அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து குடிமராமத்துப் பணி மூலமாக, விவசாயிகள் பங்களிப்புடன் இந்தத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றி வருகின்றது. ஆனால் இவர்கள் வேண்டுமென்றே, எந்த அனுமதியும் பெறாமல், குளத்திற்கு சென்று மண்ணை அள்ளுவது எப்படி நியாயம் ஆகும் ? இது அரசாங்கத்தினுடைய சொத்து, இது அரசாங்கத்தினுடைய குளம், ஏரி. அந்த அரசாங்கத்தினுடைய குளம், ஏரியில் தூர்வாரவேண்டுமென்று சொன்னால், அரசாங்கத்தினுடைய அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற்றுத் தான் அந்தப் பணியைத் துவங்க வேண்டும். இவர்கள் எந்த அனுமதியும் பெறாமல் அந்த குளத்திற்குச் செல்கின்றார்கள். ஆனால், அங்கே இருக்கின்ற விவசாயிகள், அந்தக் குளம், ஏரிகளிலிருந்து, வண்டல் மண்ணை தங்களின் நிலப் பயன்பாட்டிற்காக எடுத்துச் செல்கின்றார்கள். அதை மறித்து, இவர்களுடைய கட்சிக்காரர்கள், அங்கே சென்று, அந்தக் குளத்தில் எந்த அனுமதியும் இல்லாமல், மண் அள்ளுவது எந்தவிதத்திலே சரியாக இருக்கும் ? இதை நேரடியாகப் பார்க்க வேண்டுமாம். இவையெல்லாம் இந்த ஆட்சியின் மீது பழி போடுவதற்கான திட்டம். ஆகவே, அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் சிறப்பாக ஆட்சி செய்து வருகிறது. சட்டப்படியான ஆட்சி.

சட்டப்படிதான் அம்மாவினுடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு வண்டல் மண் அள்ளுவதற்கு, அதற்குண்டான அதிகாரிகளிடத்திலே அனுமதி பெற்றுத் தான் அந்த வண்டல் மண்ணை எடுத்துச் செல்ல வேண்டும். இது தான் அரசினுடைய உத்தரவு. அதன்படி தான், ஆங்காங்கே இருக்கின்ற குளங்கள், ஏரிகள் மூலமாக வண்டல் மண் விவசாயிகள் இன்றைக்கு அள்ளிச் செல்கின்றார்கள். ஆனால், இவர்களுக்கு மட்டும் தனி விதி, தனி சட்டம், இவர்கள் நினைத்ததை செய்ய வேண்டும். ஒருக்காலும் நடக்காது. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு சட்டத்தின் ஆட்சியில் நடக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கின்றார். இவர்களுடைய மாவட்டத்திலே எந்தப் பணியும் நடைபெறவில்லை. அதனால் தான் முதலமைச்சர் தொகுதியிலே சென்று நான் தூர்வாரினேன் என்ற ஒரு தவறான செய்தியை சொல்லிவருகின்றார்.

என்னுடைய எடப்பாடி வட்டத்தில் பொதுப்பணித்துறையின் கீழ் 8 நீர்நிலைகள், உள்ளாட்சித்துறையின் கீழ் 31 நீர் நிலை என மொத்தம் 39 நீர்நிலைகள் மாவட்ட அரசிதழில் விளம்புகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது வரை 36 நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு வருகிறது. 2326 விவசாயிகள், 2 லட்சத்து, 62 ஆயிரத்து 803 கன மீட்டர் வண்டல் மண் மற்றும் சவுடு ஆகிவயற்றை எடுத்து சென்றுள்ளனர் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்

சேலம் மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் 133 நீர்நிலைகளும், உள்ளாட்சித்துறை கட்டுப்பாட்டில் 846 நீர்நிலைகளும் என மொத்தம் 979 நீர்நிலைகள் உள்ளன. இதில் 26.7.2017 வரை 415 நீர்நிலைகளில் தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

26.7.2017 வரை 37 ஆயிரத்து 616 விவாசாய பெருமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 3 கோடியே 51 இலட்சத்து, 41 ஆயிரத்து 888 கன மீட்டர் களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் கிராவல் எடுக்கப்பட்டுள்ளது.

கிராமப் பகுதியில் கூறுவார்கள், குழம்பிய குட்டையில் மீன் பிடித்தல் என்று – அது போல இவர் கூறுகிறார்.

சேலம் மாவட்டத்தில் குடிமராமத்து பணிகளே நடைபெற வில்லை, அதுவும் எனது தொகுதியில் நடைபெறவில்லை என்று

– முழு பூசணிக்காயை சோற்றிலே மறைப்பதுபோல

ஏற்கனவே எங்கள் பகுதி விவசாய பெருமக்களால் தொடங்கி தூர் வாரி முடிக்கப்பட்ட கச்சராயன் குட்டையில்

தூர் வார வருகிறார் – பார்வையிட வருகிறார் என்று.

அரசியல் செய்வதற்கு என்று எவ்வளவோ இடங்கள் உள்ளன. ஏற்கனவே, வறட்சியால் பாதிக்கப்பட்டு, இவ்வாண்டு பெய்யும் பருவ மழையினை சேமித்து வைக்க குடிமாரமத்து பணிகளை செய்து வரும் விவசாயிகளின் வாழ்க்கையில் அரசியல் செய்ய வேண்டாம் என்றும் எதிர்கட்சிக் காரர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, 140 ஆண்டுகாலம் இல்லாத வறட்சி. இன்றைக்கு தமிழகத்தில் போதிய மழை இல்லை. நமக்கு 32 சதவீதம் தான் மழை பொழிந்துள்ளது. ஆகவே, நீர்நிலைகளில் நீர் இல்லை. ஒருசில இடங்களில் 1000 அடிக்கு ஆழ்துளை போட்டால்தான் குடிநீர் கிடைக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக, தமிழகத்திலே எங்கும் குடிநீர் பிரச்சினை இல்லை என்கின்ற நிலையை எடுத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்றைக்கு 2247 கோடி ரூபாய் நிவாரணம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆங்காங்கே நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். புதிதாக பயிர் செய்கின்ற விவசாயிகளுக்குத் தேவையான கடனை உடனடியாக வழங்க ஆணையிட்டு, விவசாயிகளுக்கு தேவையான பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகின்றது என்பதையும் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, கல்வியில் புரட்சி, மறுமலர்ச்சி இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில் பார்க்கமுடிகிறது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே கல்விக்கென தனிக்கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. தமிழகத்தில் கல்வி வளர்ச்சியில் புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்றால் அது மிகையல்ல.

சேர்க்கை விகிதம் கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 2011–ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் அமர்கின்ற காலத்தில் 21 சதவீதமாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், தமிழகத்தில் 2016ம் ஆண்டு உயர் கல்வி சேர்க்கை விகிதம் 44.3 சதவீதிம். இது இந்திய அளவில் வெறும் 24.5 சதவீதம் ஆகும்.

இதற்கு காரணம் மாண்புமிகு அம்மா அவர்களின் 6 ஆண்டு கால ஆட்சியில் 4 பொறியியல் கல்லூரிகள், 16 பால்டெக்னிக்–கள், 21 அரசு கல்லூரிகள், 24

பல்கலைக் கழக உறுப்பு கல்லூரிகள் என்று மொத்தம் 65 கல்லூரிகள் துவக்கப்பட்டதுதான் என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் கூறுகிறேன்.

இப்படி பல்வேறு கல்லூரிகள் துவங்கப்பட்டதன் விளைவாக ஏழை, எளிய, கிராமப்புற, ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வித்தரம் உயர வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக இன்று கல்வியின் தரம் உயர்ந்திருக்கின்றது. படிப்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் அம்மா ஆட்சியில் இவ்வருடம் 8 அரசு கலை கல்லூரிகள், 3 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் என்று மொத்தம் 11 கல்லூரிகள் துவக்கப் பட்டுள்ளன என்பதை இங்கு பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் 75 மீனவர் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் அம்மா அரசின் தொடர் முயற்சியின் பலனாக நேற்று 75 மீனவர்கள் இலங்கை நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எங்களது தொடர் வலியுறுத்தலின் காரணமாக இலங்கை அரசை வலியுறுத்திய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் இச்சமயத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, தமிழகத்திலே, வீடு இல்லாதவர்களுக்கு புதிதாக, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் வீடுகட்டிக்கொள்வதற்கு 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது.

வீடே இல்லாத நிலை இன்றைக்கு தமிழகத்தில் உருவாக வேண்டுமென்ற அடிப்படையில், தொடர்ந்து பாரத பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத்தியதன் காரணமாக, நேற்று இராமேஸ்வரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில், தமிழகத்திற்கு எத்தனை லட்சம் வீடுகள் கேட்டாலும் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது அம்மாவின் அரசுக்கு கிடைத்த வெற்றி.

- நெசவாளிகளுக்கு குறிப்பிட்ட அளவிற்கு விலையில்லா மின்சாரம்,
- கடும் வறட்சியிலும் குடிநீர் பிரச்சனையை சமாளித்தல்

அதேபோல, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடுமையான மின்வெட்டு ஏற்பட்டது. இதனால், தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் அமர்ந்தவுடன் அப்படிப்பட்ட நிலையை மாற்றி, தமிழகத்திலே மூன்றாண்டுகளில் சரிசெய்து

மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டினார்கள் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருவண்ணமாலை மாவட்ட அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று இரண்டு புதிய அறிவிப்புகளை மகிழ்ச்சியுடன் அறிவிக்க விரும்புகின்றேன்.

- திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர், செங்கம், கலசபாக்கம் வட்டங்களில் உள்ள மலைகிராமங்களை உள்ளடக்கி ஜமுனாமரத்தூர் என்ற புதிய வட்டம் உருவாக்கப்படும். இதன் மூலம் மலைகிராமங்களிலுள்ள மக்கள் அவர்கள் பகுதியிலேயே புதியதாக திறக்கப்பட உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் தங்களது தேவைகளை சிரமமின்றி பூர்த்திசெய்து கொள்ளலாம்.
- திருவண்ணாமலையில் இதுவரை இரண்டு வருவாய் கோட்டங்கள் மட்டுமே உள்ளன. எனவே நிர்வாக மேம்பாட்டுக்காகவும், பொதுமக்கள் வசதிக்காகவும் ஆரணி, போளூர், கலசபாக்கம் மற்றும் புதியதாக அமையவுள்ள ஜமுனாமரத்தூர் என்கிற 4 வட்டங்களை உள்ளடக்கி, ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு 3வது புதிய வருவாய் கோட்டம் அமைக்கப்படும்.

அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு. ஏழை, எளியவர்களுடைய அரசு. ஏழை, எளியவர்களின் நலனைக் காக்கக்கூடிய அரசு. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்திலே குறிப்பிட்டார்கள், எனக்குப் பின்னாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் 100 ஆண்டு காலம் ஆட்சியதிகாரத்தில் இருந்து, ஏழை மக்களுக்கு நன்மைபயக்கும் என்று அறிவித்தார்கள். அந்த வெற்றிப் பாதையிலே, அம்மாவினுடைய அரசு செல்லும். அதற்கு நீங்கள் துணை நிற்பீர்கள் என்று அன்போடு கேட்டு,

நேற்றும் நமதே! இன்றும் நமதே!
நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
**அம்மாவினுடைய புகழ் ஓங்குக** !
நன்றி!
வணக்கம்! ,

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**